05.02.2026.
OP.No.73/2022

ம. சா. 1 மரியதாஸ் புருஸ்லி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் எம்.எஸ்.ஸி.பிஎட் படித்துள்ளேன். நான் தற்போது மதுரை மாவட்டம், செட்டியபட்டி ஆர்சி நடுநிலைப்பள்ளியில் பணியாற்றி வருகிறேன். நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். எதிர்உரையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என அடிக்கடி சண்டை போட்டதாக சொல்லியுள்ள நிலையில் அது குறித்து புகார் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். யார் மூலமாக பஞ்சாயத்து பேசப்பட்டது என்பதை குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரிதான். இரண்டு முறை மனைவி கருத்தரித்ததாக சொல்லியிருப்பதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் இருவரும் காதலித்து திருமணம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். திருமணத்தின்போது வரதட்சணையாக 10 பவுன் தங்க நகைகள் மற்றும் பண்ட பாத்திரங்கள் கொடுத்தார்கள் என்றால் திருமணத்திற்கு பிறகு கொடுத்தார்கள். திருமணத்திற்கு பிறகு 3 மாதம் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தோம் என்றால் சரிதான். என் அம்மா, சகோதரி வரதட்சனை கொடுமை செய்ததாக எதிர்மனுதாரர் புகார் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. கொடுமை எதுவும் செய்யவில்லை. அதன் பின்பு நாயுடுபுரத்தில் தனியாக வீடு பார்த்து குடியிருந்தோம் என்றால் சரிதான். கொடுமை தாங்காமல்தான் எதிர்மனுதாரர் தற்கொலை செய்யப்போனதற்காக தனிக்குடித்தனம் வைத்தேன் என்றால் சரியல்ல. நான் வாடகை வீட்டில் இருந்தபோது நிறைய பெண்களுடன் ஆபாசமாக பேசிவருவேன் என்றாலும், அதை எதிர்மனுதாரர் தட்டிக்கேட்டதால் அவரை கொடுமைப்படுத்தி வந்தேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரரை அவரது தகப்பனார் M.P.Ed படிக்க வைத்தார் என்றால் இல்லை. நான் படிக்கவைத்தேன். அதற்கு ஆதாரம் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். பின்னர் 7.8.2017 ம்தேதி தேவாரம் புனித தெரசா பள்ளியில் பட்டாதாரி ஆசிரியராக பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். முதலில் அரசு வேலை கிடைக்காததால் வரதட்சணையாக எதிர்மனுதாரரிடம் 30 பவுன் தங்கநகையும் ரூ.1 லட்சமும் கேட்டு கொடுமைப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எதிர்உரையை மறுத்து மறுப்புரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா கொத்தனார் வேலை செய்து வருகிறார். நான் என்னுடைய ஏடிஎம் கார்டை என் அப்பாவிடம் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். கடன் நிறைய இருந்ததால் என் அப்பாவிடம் கொடுத்திருந்தேன். நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வீடு கட்ட வங்கியில் கடன் வாங்கியிருந்தோம் என்றால் சரியல்ல. நான் மட்டும்தான் கடன் பெற்றேன். எதிர்மனுதாரரின் தகப்பனார் வீடு கட்டுவதற்கு ரூ.2 லட்சம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தாய்மாமா மகன் ரூ.1 லட்சம் கடன் பெற்று என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை அடிக்கடி அடித்து துன்புறுத்தியதால் தேனி மாவட்டம் உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதற்கு முன்னர் என்னை அடித்து வீட்டை விட்டு வெளியே அனுப்பினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் எதிர்மனுதாரர் தேனி காவல் நிலையத்தில் கொடுத்ததுதான். அந்த புகார் நகல் எமசாஆ.1. அதற்குரிய சிஎஸ்.ஆர்.நகல் எமசாஆ.2. மேற்படி காவல்நிலையத்திலிருந்து விசாரணைக்கு என்னை அழைக்கவில்லை. ஆனால் எதிர்மனுதாரரையும் என் குழந்தையையும் அப்படியே விட்டுவிட்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. என் வீட்டில் எதிர்மனுதாரரையும் குழந்தையையும் இருந்தார்கள். என்னை வீட்டை விட்டு போகச்சொன்னதால் நான் வீட்டை விட்டு போய்விட்டேன். மேற்கண்டவாறு என்னை வீட்டை விட்டு வெளியேற்றவில்லை என்றும் நானாகவே அவர்களை விட்டுவிட்டு சென்றுவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வீட்டை விட்டு போகும்போது எதிர்மனுதாரரின் நகைகள் மற்றும் பண்ட பாத்திரங்களை எடுத்துச்சென்றேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து

தயாராக இருந்துவருகிறார் என்றும் நான்தான் எவ்வித காரணமும் இன்றி விவாகரத்து கோரியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. குடும்ப வன்முறை சட்டத்தின்படி வழக்கு போடப்பட்டு உத்தரவாகியுள்ளது என்றால் சரிதான். ஆனால் இதுவரையில் நான் எந்த பணமும் கட்டவில்லை என்றால் வீடு கட்ட கடன் பெற்றதை கட்டிவருகிறேன். நான் அவ்வாறு வங்கியில் கடன் பெற்றேன் என்பதற்கும் அதை திருப்பி செலுத்திவருகிறேன் என்பதற்கும் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எவ்வித காரணமும் இன்றி நானாகவே எதிர்மனுதாரரையும் குழந்தையையும் பிரிந்து சென்றதால் நான் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வேறு ஒரு திருமணம் செய்வதற்காக பொய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.02.05 18:35:33 +0530

Principal District Judge,
Dindigul.